செய்தி வெளியீடு எண். 102 நாள்: 15.02.2018

# 24.02.2018 அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து வருகின்ற 24.02.2018 (சனிக்கிழமை) அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை திருவள்ளூர் மாவட்ட, மதுரவாயல் பைபாஸ் ரோட்டில் உள்ள மதுரவாயல் ஏரிக்கரை பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனப் பல்கலைக் கழகம், அடையாளம்பட்டு வளாகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை நடத்தப்படவுள்ளது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் சுமார் 75-க்கும் மேற்பட்ட வேலையளிப்பவர்கள் பங்கேற்று தேவையான வேலைநாடுநர்களை பணிக்கு தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாம் 24.02.2018 அன்று காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நடைபெறும். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் 8-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை முடித்தவர்கள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இம்முகாமில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு பணி நியமனம் பெற்றவர்களுக்கு ஆணைகளை வழங்குவார்கள்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைநாடுநர்கள் தேர்வு செய்ய விருப்பம் உள்ள வேலையளிப்பவர்கள் (Employers) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை தொடர்புகொண்டு முகாமில் இட ஒதுக்கீட்டினை உறுதி செய்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**